# 4. விதி 110–ன்கீழ் அறிக்கை

## பாலாற்றின் குறுக்கே ஆந்திர அரசு அணை கட்டுவதைத் தடுக்க தமிழக அரசு எடுத்துள்ள நடவடிக்கைகள்– மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சரின் அறிக்கை

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவை விதி 110–ன்கீழ் அறிக்கை ஒன்றை அளிக்க வேண்டும் என்று மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் அவர்கள் அனுமதி கோரியுள்ளார்கள். அனுமதி அளிக்கப்படுகிறது. மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பாலாற்றின் குறுக்கே ஆந்திர அரசு அணை கட்டுவது குறித்துத் தொடர்ந்து ஏடுகளில் செய்திகள் வந்துகொண்டே இருக்கின்றன. இந்த அவையில் இதற்கு முன்பு 10–4–2007 அன்றும், 19–4–2007 அன்றும் இந்தப் பிரச்சினை பேசப்பட்டு, அதற்கு நான் இதே அவையில் பதிலும் அளித்திருக்கிறேன். இருந்தபோதிலும், தமிழக அரசும், பொதுப் பணித் துறை அமைச்சர் பொறுப்பையேற்றிருக்கின்ற நானும் குறட்டைவிட்டுத் தூங்கிக்கொண்டிருப்பதாகத் தோழமைக் கட்சியின் தலைவர் ஒருவர் வெளியிலே பேசியிருக்கிறார். அதற்கு நான் விளக்கம் அளிக்க வேண்டியவனாக உள்ளேன்.

குறிப்பாக, ஆந்திர முதலமைச்சர் மாண்புமிகு ராசசேகர ரெட்டி அவர்கள் தமிழக முதலமைச்சருக்குக் கடந்த பிப்ரவரி மாதம் கடிதம் எழுதியிருக்கிறார். அந்தக் கடித விவரம் இதுவரையில் வெளியிடப்படவில்லை. கடித விவரத்தை வெளியிடாமல் மறைத்து வைத்தது ஏன் என்று அந்தத் தலைவர் கேட்டிருக்கிறார். கடந்த 10–4–2007 அன்று இதே அவையில் அ.இ.அ.தி.மு.க. உறுப்பினர் திரு. பாண்டுரங்கன், இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியின் உறுப்பினர் திரு. சி. ஞானசேகரன், பா.ம.க. சட்டமன்றத் தலைவர் திரு. ஜி.கே. மணி ஆகியோர் பாலாறு பற்றிப் பேசி விவரம் கேட்டபோது, நான் அளித்த பதிலில், "ஆந்திர மாநிலத்தில் பாலாற்றின் குறுக்கே அணை கட்டப்படும் என்ற செய்தி 5–1–2006 முதல் அடிக்கடி வந்துகொண்டிருக்கிறது. அப்போதிருந்தே தமிழக அரசு சார்பில் கடிதங்கள் எழுதப்பட்டு இருக்கின்றன. எதிர்ப்புகள் தெரிவிக்கப்பட்டிருக்கின்றன. இந்த அரசு பொறுப்பேற்ற பிறகு, 5–8–2006 அன்று ஆந்திர மாநிலத்திற்குச் சென்று நம்முடைய மாண்புமிகு

[திரு. துரைமுருகன்] [2007 மே 2

உள்ளாட்சித் துறை அமைச்சர் தளபதி திரு. மு.க. ஸ்டாலின் அவர்களும், மாண்புமிகு அமைச்சர் திரு. பொன்முடி அவர்களும் — அப்பொழுது நான் உடல் நலமில்லாமல் மருத்துவமனையிலே இருந்த நேரம் — ஆந்திர முதலமைச்சர் அவர்களைச் சந்தித்து, இது குறித்துப் பேசினார்கள். அப்போது தமிழக மக்களுடைய நலனைப் பாதிக்கக்கூடிய அளவுக்குச் சட்டத்திற்குப் புறம்பாக எந்த அணையையும் ஆந்திர அரசு கட்டாது என்று ஆந்திர முதலமைச்சர் அவர்கள் உறுதி அளித்திருந்தார்கள். அப்படி ஏதாவது நாங்கள் கட்டுகிற நிலை ஏற்பட்டால், 1892 ஆம் ஆண்டின் பன் மாநில ஒப்பந்தப்படி அதனுடைய விவரத்தைத் தமிழக அரசுக்கு நாங்கள் அனுப்புவோம் என்று தெரிவித்திருந்தார்கள். பிறகு, மறுபடியும் அணை கட்டுவதாக ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது என்ற செய்தி 22-1-2007 அன்று வந்தவுடன், பொதுப் பணித் துறையின் செயலாளர், ஆந்திர மாநில அரசுச் செயலாளருக்கு ஒரு கடிதம் எழுதினார். 25-1-2007 அன்று பூமி பூஜை நடைபெறுவதாகப் பத்திரிகையிலே செய்தி வந்தவுடன், அது குறித்து நானே ஆந்திர மாநில அமைச்சருக்கு ஒரு கடிதம் எழுதினேன். இதற்கு மேலாக, ஆந்திர அரசு மேற்கொள்ளும் திட்டங்கள் குறித்துச் சரியான விவரங்களை அளிக்கும்படி 1-2-2007 அன்று நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஆந்திர முதலமைச்சருக்கு ஒரு கடிதம் எழுதி இருக்கிறார்கள். அதற்குப் பதில் அளிக்கும் வகையில், இத்திட்டத்திற்கான வடிவமைப்பு இறுதியாக்கம் செய்யப்பட்டு வருகிறது என்றும், உறுதி அளித்தவாறு திட்டத்தின் விவரங்கள் தமிழ்நாட்டிற்கு அளிக்கப்படும் என்றும் 5-2-2007 அன்று ஆந்திர முதல்வர் அவர்கள் நமக்கு ஒரு செய்தியை அனுப்பினார்கள்".

இந்த விவரங்களை இந்தப் பேரவையில் நான் பேசி, அது அவைக் குறிப்பில் இடம்பெற்றுள்ளது. 3-2-2007 அன்று நமது முதலமைச்சர் மாண்புமிகு கலைஞர் அவர்கள், ஆந்திர மாநில முதலமைச்சர் அவர்களோடு தொடர்பு கொண்டு, இத்திட்டம் குறித்துத் தொலைபேசியிலும் விளக்கம் கேட்டார்கள். அது அப்போதே ஏடுகளில் வெளிவந்துள்ளது. ஆனால், இவ்வளவுக்கும் பிறகு இன்றையதினம் அந்தத் தலைவர் அவர்கள் ஆந்திர முதலமைச்சர் எழுதிய கடிதம் பற்றி அவைக்குத் தெரிவிக்கவில்லை என்றும், மறைக்கப்பட்டுவிட்டது என்றும் கூறியிருப்பதைப் பார்த்து நான் பெரிதும் வருந்துகிறேன்.

முற்பகல் 11-05

பா.ம.க. தலைவர் திரு. கோ.க. மணி ஒத்திவைப்புத் தீர்மானம் கொண்டு வந்தபோதிலும், அது அனுமதிக்கப்படவில்லை என்றும்

2007 மே 2] [திரு. துரைமுருகன்]

பா.ம.க. நிறுவனத் தலைவர் டாக்டர் ராமதாஸ் அவர்கள் தெரிவித்திருக்கிறார்கள். திரு. கோ.க. மணி அவர்கள் 10 ஆம் தேதி சிறப்புக் கவன ஈர்ப்பில் பேசியிருக்கிறார். 19 ஆம் தேதி இதே பிரச்சினைக்காகக் கவன ஈர்ப்பு எடுத்துக்கொள்ளப்பட்டபோது, பாமக. சார்பில் திருப்பத்தூர் சட்டப் பேரவை உறுப்பினர் திரு. தி.க. ராஜா அவர்கள் பேசியிருக்கிறார்கள். எனவே, பேரவையில், இந்தப் பிரச்சினை குறித்துப் பேச அனுமதிக்கப்படவில்லை என்பதும் தவறான குற்றச்சாட்டாகும்.

ஆந்திர அரசுக்குத் தொடர்ந்து நாம் வலியுறுத்தியதன் பயனாக, ஆந்திர முதலமைச்சர் அவர்கள் மீண்டும் ஒரு கடிதம் எழுதி, அது நேற்றையதினம் நமக்கு வந்துள்ளது. அந்தக் கடிதத்தில் அவர்கள் இதற்கு முன்பு உறுதியளித்துள்ளவாறு, பாலாற்றின் குறுக்கே அவர்கள் கட்டவுள்ள தடுப்பணைக் குறித்த விவரத்தை எழுதி, அதன் காரணமாக 200 m.c.ft. தண்ணீர் குடிநீருக்காகவும், 400 m.c.ft. தண்ணீர் 4,000 ஏக்கர் பாசனத்திற்காகவும், இரண்டும் சேர்த்தால் 0.6 t.m.c., ½ t.m.c.-க்குக் கொஞ்சம் மேலே தண்ணீர் மட்டும் எடுக்கவிருப்பதாகவும் சொல்லி, அந்தத் திட்டத்திற்கான வரைபடத்தையும் இணைத்து அனுப்பியிருக்கிறார்கள். இந்தக் கடிதம் நேற்றுதான் வந்தது. இதைக்கூட நாம் ஏற்றுக்கொள்ளத் தயாராக இல்லை. ஏற்கெனவே 25-4-2007 அன்றே உச்ச நீதிமன்றத்தில் ஆந்திர அரசின் நடவடிக்கைக்குத் தடை விதிக்க வேண்டுமென்று தமிழக அரசின் சார்பில் மனுத் தாக்கல் செய்திருக்கிறோம். எனவே, பாலாறு பற்றி இந்த அரசு பொறுப்பேற்ற பிறகு எந்தவிதமான சுணக்கமும் காட்டவில்லை என்பதையும், தொடர்ந்து நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுத்தான் வருகின்றன என்பதையும் புரிந்துகொள்ள முடியும்.

தமிழக அரசு குறட்டைவிட்டுத் தூங்கிக்கொண்டிருப்பதாக பா.ம.க. தலைவர் பேசயிருக்கிறார். எங்கள் தலைவரைக் கேட்டால், நாம் மேலும் தீவிரமாகப் பணியாற்ற வேண்டுமென்று ஊக்கப்படுத்துவதற்காகத்தான் தோழமைக் கட்சித் தலைவர் என்ற முறையில் அவர் அவ்வாறு கூறியிருப்பார் என்று கூறுவார்.

*"தூங்காமை கல்வி துணிவுடைமை இம்மூன்றும்*
*நீங்கா நிலனாள் பவற்கு"*

என்ற அய்யன் திருவள்ளுவரின் அரிய மொழிக்கேற்ப, அற்புதமான பண்புகளைக்கொண்டு தமிழ்நாட்டின் முதல்வராகப்

[திரு. துரைமுருகன்] [2007 மே 2

பணியாற்றிக்கொண்டு வருபவர் எங்கள் தலைவர் கலைஞர் அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அவர் மட்டும் இரவில் தூங்குவதில்லை; அமைச்சர்கள் யாரையும் அவர் தூங்க விடுவதுமில்லை. பொதுப் பணித் துறை பற்றி ஏட்டில் ஒரு செய்தி காலை 5–00 மணிக்கு வெளிவந்தால் அதற்கு அடுத்த நிமிடம் எனக்குத் தொலைபேசி வரும். அவரையோ, இந்த அரசையோ தூங்குகிறது என்று சொல்வதை, பொறுத்தார் பூமி ஆள்வார் என்ற பொன்மொழிக்கேற்ப பொறுமையோடு ஏற்றுக்கொள்வார். ஆனால், அவர் தலைமையில் உள்ள இந்த அரசு தூங்கிக்கொண்டிருக்கிறது என்பதை, அன்றாடம் ஒரு சாதனையையும், சலுகையையும் அனுபவித்துக்கொண்டிருக்கிற மக்கள் ஏற்றுக்கொள்ளத் தயாராக இல்லை என்பதைக் கூறி, அமர்கிறேன். *(மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடுகள்)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** விதி 110–ன்கீழ் தரப்படுகின்ற அறிக்கையின்மீது விவாதம் கிடையாது. *(குறுக்கீடுகள்)* உட்காருங்கள். *(குறுக்கீடுகள்)* விதியைக் கேளுங்கள்.

"(1) பொது முக்கியத்துவம் வாய்ந்த ஒரு பொருளைப் பற்றி ஓர் அமைச்சர் பேரவைத் தலைவரின் இசைவுடன் அறிக்கை ஒன்றை அளிக்கலாம்.

(2) அவ்வறிக்கையின்மீது அப்போது எவ்வித விவாதமும் இருத்தல் கூடாது." *(குறுக்கீடுகள்)* உட்காருங்கள்.

**திரு. சி. ஞானசேகரன்:** Hon. Speaker Sir, Point of order. *(குறுக்கீடுகள்)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள். Mr. Gnanasekaran. உட்கார்ந்துகொண்டிருந்தால் உங்களுக்குக் கால் வலிக்குமா? எப்பொழுதும் நின்றுகொண்டேயிருக்கிறீர்களே? *(குறுக்கீடுகள்)* உட்காருங்கள். *(குறுக்கீடுகள்)*

**திரு. ஜி.கே. மணி:** Point of order.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** விவாதம் இல்லை. *(குறுக்கீடுகள்)* திரு. மணி, விவாதம் இல்லை. *(குறுக்கீடுகள்)* Not permitted, உட்காருங்கள்.